පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය -492

ආයතනයේ නම - දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය-ගාල්ල

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බනධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරිම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் -492

நிறுவனத்தின் பெயர் : காலி மாவட்ட செயலகம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4)இன் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Series No -492**

**Name of the institution -District Secretariat Galle**

**Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)**

<table>
<tr><td>அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள குறைபாடுகள் (2023)</td><td>குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலை</td></tr>
<tr><td>முதல் பகுதி</td><td></td></tr>
<tr><td>உள்ளக ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்காத சந்தர்ப்பங்கள் அறிக்கைப்பட்டுள்ளன</td><td>மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில், பிரதேச செயலாளர் கலந்துரையாடல்களில் மற்றும் பிரதேச செயலக கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போது, உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கு உரிய காலத்திற்குள் பதிலளிப்பதை முன்னுரிமைப் பணியாகக் கருதி செயற்படவேண்டும் என்று மாவட்ட செயலகத்தின் அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அனைத்துப் பிரிவுத் தலைவர்ளையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.<br><br>
<table>
<tr><th>வருடம்</th><th>சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை</th><th>ஒரு மாதத்துக்குள் பதிலளிப்பின் அளவு</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>2022</td><td>88</td><td>50</td><td>57 %</td></tr>
<tr><td>2023</td><td>109</td><td>69</td><td>63 %</td></tr>
<tr><td>2024</td><td>131</td><td>130</td><td>99 %</td></tr>
<tr><td>2025</td><td>150</td><td>126</td><td>84 %</td></tr>
</table></td></tr>
<tr><td>பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புகள் தொடர்பாக நி.ஒ. 571 இன் பிரகாரம் செயல்பட்டிருக்கவில்லை</td><td>பொது வைப்புக் கணக்கில் நிர்ணைக்கப்படாத நிலுவைகள் தொடர்பான தற்போதைய நிலை பின்வருமாறே<br><br>
<table>
<tr><th rowspan="2">திறைசேரி பொது வைப்பீட்டுக் கணக்கு இலக்கம்</th><th colspan="2">2023/12/31 ஆம் திகதிற்கு காலவதியானவைப்பீடு நிலுவை</th><th colspan="2">2025/12/31ஆம் திகதிற்கு நிலுவை</th><th rowspan="2">விபரம்</th></tr>
<tr><th>ரூபா</th><th>சதம்</th><th>ரூபா</th><th>சதம்</th></tr>
<tr><td>6000-0-0-002-0-094-0</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td></td></tr>
<tr><td>6000-0-0-013-0-062-0</td><td>10,072,460</td><td>20</td><td>-</td><td>-</td><td>விடுவித்து முடிந்தது</td></tr>
<tr><td>6000-0-0-017-0-015-0</td><td>97,718</td><td>50</td><td>-</td><td>-</td><td>விடுவித்து முடிந்தது</td></tr>
<tr><td>6000-0-0-016-0-045-0</td><td>201,659,426</td><td>75</td><td>19,169,426</td><td>44</td><td>• 9,821,865.35 ரூபா தொகையை விடுவித்துள்ளது<br>• 172,668,134.92 ரூபா தொகையை அரசாங்க வருமானத்திற்கு வரவு செய்துள்ளது. விபரம் பின்வருமாறே</td></tr>
</table></td></tr>
</table>

| வைப்பீடு செய்த தொகை | | விபரம் |
|---|---|---|
| ரூபா | சதம் | |
| 167,993,279 | 99 | தென் மாகாண பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாகாண வீதிகளை கார்பெட் இடும் கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக , 328 வீதிகளுக்காக மாவட்ட செயலக பொது வைப்புக் கணக்கில் 2 வருடங்களுக்கு மேலான, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பணத்தை. அரச கணக்காய்வு பிரிவின் அறிவுறுத்தல் மற்றும் மாவட்ட செயலாளரின் அனுமதியுடன் 2024.12.31 அன்று அரச வருமான கணக்கிற்கு வரவுசெய்தல். |
| 2,239,180 | 07 | திட்டமிடல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட, வெள்ளத்தினால் சேதமடைந்த வீதிகளை புனரமைக்கும் திட்டத்தின் 2 வருடங்கள் கடந்துள்ள, தடுத்து வைக்கப்பட்ட பணத்தை 2024.12.31 அன்று அரச வருமானத்திற்கு வரவுசெய்தல். |
| 627,535 | 45 | காலி சமனல பூங்காவில் அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் கண்காட்சி கருத்திட்டத்தின் தடுத்து வைக்கப்பட்ட பணத்தை 2024.12.31 அன்று அரச வருமானத்திற்கு வரவு செய்தல். |
| 1,808,139 | 41 | திட்டமிடல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களில் 5 வருடங்கள் கடந்த தடுத்து வைக்கப்பட்ட பணத்தை 2024.12.31 அன்று அரச வருமானத்தில் வரவு செய்தல். |
| **172,668,134** | **92** | |

- 19,169,426.44 ரூபா தடுப்புகளை ,கருத்திட்ட ஆலோசகரின் பரிந்துரைப்பெற்ற பின் சன்கென் கன்ஸ்டிரக்ஷன் நிறுவனத்திற்கு விடுவிக்கப்படும். விபரம் பின்வருமாறே.

| **பணம்வைப்பீடு செய்த திகதி** | **வைப்பீட்டுத் தொகை (ரூபா)** | **விபரம்** |
|---|---|---|
| 2019.12.31 | 2,250,646.90 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்க அத்திவாரம் இடுதல் 2ஆம் உண்டியலில் தடுத்து வைக்கப்பட்ட பணம் 10% - 2,083,932.31 ரூபா ,வெட் – 166,714.59 ரூபா |
| 2019.12.30 | 1,647,480.92 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்க அத்திவாரம் இடுதல் 2ஆம் உண்டியலில் தடுத்து வைக்கப்பட்ட பணம்- 10% |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2020.02.26 | 2,577,862.03 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் வேலை முற்பணம் 3ஆம் உண்டியலை நிர்ணைக்கும் தடுப்புகள். |
| | | | | | | 2020.03.30 | 3,700,702.52 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் வேலை முற்பணம் 4ஆம் உண்டியலை நிர்ணைக்கும் தடுப்புகள். 10% தடுப்புத் தொகை 3,426,576.40 ரூபா வெட் 274,126.12 ரூபா |
| | | | | | | 2020.04.30 | 747,501.10 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் வேலை முற்பணம் 4ஆம் உண்டியலை நிர்ணைக்கும் தடுப்புகள். |
| | | | | | | 2020.11.17 | 3,022,414.68 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் தடுப்புகள். |
| | | | | | | 2020.12.09 | 2,125,382.84 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் வேலை முற்பணம் 4ஆம் உண்டியலின் பாதித் தொகையை செலுத்தும் தடுப்புகள் |
| | | | | | | 2021.03.30 | 1,964,061.41 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் 7ஆம் உண்டியலை நிர்ணைக்கும் தடுப்புகள். |
| | | | | | | 2021.03.18 | 1,133,374.04 | 2000 ஆசனங்கள் கொண்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் 6ஆம் உண்டியலை நிர்ணைக்கும் தடுப்புகள். |
| | | | | | | | **19,169,426.44** | |
| நி.ஒ. 371 பிரகாரம் வழங்கப்பட்ட தேவை நிமித்த உப பணி முற்பணம், பணி முடிந்து 10 நாட்களுக்குள் நிர்ணைத்திருக்கவில்லை | முறையான பின்னோட்ட செயல்முறையின் மூலம், குறித்த பணி முடிந்தவுடன் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குள் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | | | | | | | |

| இரண்டாம் பகுத | |
|---|---|
| மாதாந்தமாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை | 2022 ஆம் ஆண்டின் இறுதி பாகத்தில் முகம் தந்த பொருளாதார நெருக்கடி காரணமாக, அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்ய வேண்டிய தேவையினால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நேரடியாக நடத்த முடியாமல் போனதுடன், கணிசமான எண்ணிக்கையிலான கூட்டங்கள் இணையவழி ஊடாக நடத்தப்பட்டன. அதன் பின்னர், 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது, அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2025.09.01 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 03/2025 இலக்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு மறுசீரமைப்புச் சுற்றறிக்கைக்கு இணங்க, காலாண்டுக்கு ஒருமுறை கட்டாயமாக இக்கூட்டங்களை நடத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்திலும் அவற்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| மாவட்ட வீடமைப்புக் குழு மாதாந்தம் கூடியிருக்க வில்லை | 2016.06.22 ஆம் திகதியிட்ட அமைச்சரவைக் குறிப்பிற்கு இணங்க, வீடமைப்புக் குழுவின் அழைப்பாளராக ஏற்புடைய மாவட்டத்தின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்டப் பணிப்பாளர் செயற்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, அதன் சமத் தலைமைப் பதவி மட்டுமே மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிலும் மாவட்ட வீடமைப்புக் குழு கூட்டப்படாததுடன் அதற்கான கூட்டங்களும் நடத்தப்படவில்லை.<br><br>இந்த விடயமானது மாவட்டச் செயலகத்தினால் கட்டுப்படுத்த முடியாத ஒரு காரணியாக இருப்பதால், இலங்கை பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழ் வரும் நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றுகைப் பற்றி மதிப்பீடு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இணையவழித் தகவல் முகாமைத்துவ வினாப்பட்டியலில், இந்த மாவட்ட வீடமைப்புக் குழுவை நடத்துவது தொடர்பான மதிப்பீட்டை மாற்றம் செய்வது பொருத்தமானது என முன்மொழிந்து, எனது சமவிலக்கம் DSG/FIN/16/03/05/2025 கொண்ட மற்றும் 2026.01.06 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் பாராளுமன்ற பொதுச் செயலாளரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| . மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் கூடி இருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டில் சிறு மற்றும் பெரும் போகங்களுக்காக பயிர்ச்செய்கை இலக்குகளை அடைவதற்காக 02 கூட்டங்களும், பிந்தைய மதிப்பீடு மற்றும் அவதானிப்பு தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்காக 02 கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் விசேட சேதன உரத் திட்டத்தின் காரணமாக, மாவட்டத்தில் புதிய சேதன உர உற்பத்தியாளர்களைக் கண்டறிதல் மற்றும் அது சார்ந்து எழுந்த நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக மாதாந்தம் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், அந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சேதன உர மானிய முறையில் சிக்கல்கள் மற்றும் தொடர்ச்சியாக எழுந்த பிரச்சினைகள் காரணமாக மாதாந்தம் 12 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.<br><br>சாதாரணமாக ஒரு வருடத்தில் சிறு மற்றும் பெரும் போக பயிர்ச்செய்கை இலக்குகளைப் பெறுவதற்காக உரத் துணைக் குழுக் கூட்டங்கள் 02 நடத்தப்படுவதுடன், விசேட சந்தர்ப்பங்களில் உரத் துணைக் குழுவிற்கு மேலதிகமாக ஏதேனும் சிக்கல்கள் எழும் பட்சத்தில், உரத் துணைக் குழுவில் பங்கேற்கும் அதே அதிகாரிகள் மாவட்ட விவசாயக் குழுவிலும் பங்கேற்பதால், தேவையின் அடிப்படையில் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்களின் போது அந்தப் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.<br><br>2023 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகக் குழுக்கூட்ட கால அட்டவணையின்படி 04 நாட்களைக் குறிப்பிட்டுள்ளது. அதற்கமைய 2023.02.20 மற்றும் 2023.08.29 ஆம் திகதி என்ற இரு திகதிகளில் உரத் துணைக் குழுக்கள் நடத்தப்பட்டதுடன் 2023.04.25 மற்றும் 2023.10.03 ஆம் திகதி என்ற இரு திகதிகளில் விவசாயக் குழுவிற்கு இணையாக உரத் துணைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவ்வாறு சிறு / பெரும் போக இரண்டிற்காக சாதாரணப் படி உரத் துணைக் குழுக் கூட்டங்கள் 2 முறை நடாத்துவது போதுமானதென அரசாங்க அதிபரின் வாய்மூல அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளன. அதனால் மாவட்ட உர ஒருங்கிணைப்புத் துணைக் குழுக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்படவில்லை என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

| | |
|---|---|
| | 2025.12.03 அன்று விவசாய அமைச்சுடன் நடைபெற்ற 'Zoom' கலந்துரையாடலின் போது, பயிர்ச் செய்கை இலக்குகளுக்காக மட்டும் 02 கூட்டங்களை நடத்துவதற்கும், தேவை ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் மாவட்ட அரசாங்க அதிபரினால் விசேட கூட்டங்களை அழைப்பதற்கு முடிகின்ற படி இதனைத் திருத்தப்படுகின்றதாக கூறியுள்ளது. அதற்கமைய, மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் கூட வேண்டும் எனும் விவசாய அமைச்சின் **NFS/2021/01** இலக்கம் கொண்ட 2021.02.22 திகதியிட்ட சுற்றறிக்கை விதியைத் திருத்த வேண்டியதன் அவசியம் குறித்து, எனது **DSG/FIN/16/03/05/2025** சம இலக்க மற்றும் **2026.01.06** திகதியிட்ட கடிதம் மூலம் பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| மாவட்ட விலை நிர்ணயக் குழு மாதாந்தம் கூடி இருக்கவில்லை | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2022.03.21 ஆம் திகதியிட்ட கடிதத்திற்கு முன்னர், ஒவ்வொரு ஆண்டும் விலை நிர்ணயக் குழுவானது ஆண்டின் முற்பாதி மற்றும் பிற்பாதி என வருடாந்தம் இருமுறை மட்டுமே கூட்டப்பட்டது. ஆனால், 2022 ஆம் ஆண்டில் சந்தை விலைகளில் ஏற்பட்ட விரைவான ஏற்ற இறக்கங்கள் காரணமாக, மேற்குறிப்பிட்ட 2022.03.21 திகதிய கடிதத்தின் மூலம் மாதாந்தம் விலை நிர்ணயக் குழுக் கூட்டங்களை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, அன்றிலிருந்து 2023 மார்ச் வரை மாதாந்தம் இக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2023 மார்ச் மாதத்திற்குப் பிறகு சந்தை விலைகள் நிறந்தரமடைந்ததால், மாதாந்தம் இக்குழுவைக் கூட்டுவது அவசியமற்றதாகக் கருதப்பட்டது. எனவே, விலை நிர்ணயக் குழுவுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து, முன்னரைப் போன்று வருடத்திற்கு இருமுறை மாத்திரமே இக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் பின்வரும் இரு தினங்களில் விலை நிர்ணயக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன:<br>• **ஜனவரி 22**<br>• **ஜூன் 25**<br>கட்டுமான விலைகளை மாதாந்தம் இற்றைப்படுத்துவது தொடர்பான உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2022.03.21 ஆம் திகதியிட்ட அறிவுறுத்தல் கடிதத்தின்படி, மாவட்டச் செயலாளர்களினால் மாவட்ட விலை நிர்ணயக் குழு மாதாந்தம் கூட்டப்பட வேண்டும் என்பதனைமாற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்துக்கொண்டு, எனது சமவிலக்கம் DSG/FIN/16/03/05/2025 கொண்ட மற்றும் 2026.01.06 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் பாராளுமன்ற பொதுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியுடைய / முனைப்பலியான/ பாதகமான மட்டத்தில் இருந்தது | 2024 ஆம் ஆண்டிற்கு தகுதியுடைய கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்று நிலவுகிறது. நிலவும் குறைபாடுகளைக் குறைப்பதன் மூலம் வரும் சில ஆண்டுகளுக்குள் தகுதியுரைக்கப்படாத அபிப்பிராயத்தைப் பெற நடவடிக்கை மேற்கொள்கின்றேன். |
| திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவான மட்டத்தில் இருந்தது. | 2023 ஆம் ஆண்டில் **261-1-1-0-2401 / 261-1-2-0-2401** ஆகிய செலவு விடயங்களின் கீழ் கிடைக்கப்பெற்ற நிதி ஒதுக்கீடு ரூபா 6,000,000.00 இல் செலவிடப்பட்ட தொகை ரூபா 1,304,008.50 ஆகும், அதற்கமைய அதன் மீதி ரூபா 4,695,991.50 ஆகும்.<br><br>நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் **01/2023** ஆம் இலக்க வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 6 (இ) பந்திக்கு இணங்க, பணிக்குழுப் பயிற்சிக்கான செலவினங்களின் கீழ் உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புகளை வழங்கும் போது; சேவைப் பிரமாணம், ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் சுற்றறிக்கை விதிகளின்படி, அந்தந்த உத்தியோகத்தர்களால் தமது தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயப் பயிற்சிகளுக்கு மட்டுமே பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>இதன் காரணமாக, 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களை 01/2023 வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கைக்கு உட்பட்டு நடாத்த முடியாமல் போனதால், திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட அளவு 50% இற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டாலும், 2024 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த முன்னேற்றமானது 93% ஆக வளர்ச்சியடைந்துள்ளதை இத்துடன் தயவுடன் அறியத்தருகின்றேன். |

| | |
|---|---|
| உச்ச சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை முறையாக இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உச்ச சேவைக்காலத்தை பூர்த்தி செய்த பெரும்பாலான உத்தியோகத்தர்கள், ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் வருடாந்த இடமாற்றங்களின் கீழும், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக இடமாற்றங்களின் கீழும் இடமாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. |
| நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன விலங்கு அமைச்சின் 2016.11.17 ஆம் திகதியிட்ட இலக்கம் SDW/3/3/16-2016 சுற்றிக்கையின் அறிவுறுத்தல்களின் படி காட்டு யானை மற்றும் ஏனைய வனவிலங்குகளினால் ஏற்படும் சேதங்களுக்கான இழப்பீட்டுக் குழு கூடியிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் யானை மற்றும் ஏனைய வனவிலங்குகளினால் ஏற்பட்ட சேதங்கள் எதுவும் அறிக்கை செய்யப்படாததால், பயனாளிகளாலோ பிரதேச செயலாளர்களாலோ நஷ்டஈடு கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை. எனவே, நஷ்டஈட்டுக் குழுவைக் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.<br><br>உயிர் அல்லது சொத்து சேதங்கள் அறிக்கை செய்யப்படும் சந்தர்ப்பங்களில், உடனடியாக நஷ்டஈட்டுக் குழுவைக் கூட்டி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான தயார்நிலை மாவட்டத்தில் நடைமுறையில் உள்ளது. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் இக்குழு கூடியுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |

.......................................................................

கே.யூ. சந்திரலால்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
காலி நிர்வாக மாவட்டம்

கே.யூ. சந்திரலால்
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
காலி நிர்வாக மாவட்டம்

.......................................................................

பீ.எல்.ஏ. குமார
பிரதம கணக்காளர்
காலி மாவட்ட செயலாளருக்குப் பதிலாக

**B. L. A. Kumara**
Chief Accountant
District Secretariat
Galle

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.